



ஓலை 110| ஓசை 233| பிப்ரவரி 2025

# அகர முதல இலக்கியப் பேரவை



## கவிதை வார இதழ்

தமிழ்ப்பணியில்...

அகர முதல இலக்கியப் பேரவை [ ம ] சிவம் அறக்கட்டளை

# திருக்குறள்

## குறள்

வசையென்ப வையத்தார்க் கெல்லாம் இசையென்னும்
எச்சம் பெறாஅ விடின்

## பொருள்

தமக்குப் பின் எஞ்சி நிற்பதாகிய புகழைக் பெறாவிட்டால் உலகத்தார் எல்லார்க்கும் அத்தகைய வாழ்க்கை பழி என்று சொல்லுவர்.


அகர முதல இலக்கியப் பேரவையில் இணைய

9597887847

அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

நிறுவனர்

**செல்வமுத்துகுமரன் குணசேகரசிவம்**

ஆசிரியர்கள்

**அ.வில்சன்**
**குமர.தர்மசீலன்**

வடிவமைப்பு

**ச.சூர்யா, அ.வில்சன்**

அலுவலக முகவரி

**97, குஞ்சிதபாதம் நகர்,
டவுன்ஸ்டேஷன் தென்புறம்,
மயிலாடுதுறை-609001.**

# அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

## கௌவை சொல்லின் எவ்வருக்கும் பகை!

## நிலைமண்டில ஆசிரியப்பா




நீர்க்குமிழ் முத்தென நீட்டி முழக்கினால்
வேர்தனை, வெட்டி வேரென முழக்கினால்
சீழ்தனை வெண்ணெயாய்ச் செப்பினால் குறைதான்;
பாழ்தான் என்றால் பதுங்கல் புலியோ?
ஒட்டடை கார்முகி லென்றால் குறைதான்;
ஒட்டகம் குதிரை யென்றால் குறைதான்;
குறையைக் குறையென குற்றம் சாட்டினால்
நிறையாய் மாறார் நினைப்பார் பகையே!
மடுவாய் இருந்து மலையென பிதற்ற
மடுவும் மலையாய் மாறிடா மடுவும்;
குறையைச் சுட்டல் குற்ற மென்றால்
குறையை மீண்டும் குறித்தே சுட்டுவேன்!
ஊர்க்கு ருவியும் உயரே பறப்பதால்
ஊர்தான் போற்றும் உயர்ந்த பறவையா?
தன்னின் திறமை தகுதி அறிந்திட
நன்மை கருதி குறைத்தால் நிறையே!
குறையைக் களைய குணமு மில்லார்
குறையைச் சொன்னால் உரைப்பார் பகையாய்!
குறையைச் சுட்டல் குற்ற மாகிக்
குறைத்தே பகையைக் குன்றென வளர்ப்பரே!
குறையைச் சுட்டல் நிறையாய் வாழவே;
நிறையாய் வாழ நெஞ்ச முவந்தே
பற்றுடன் சொன்னால் பகைதான் என்றால்
கற்றிட வைப்பேன்; பகையும் ஏற்பேன்!




**இலக்கணக் குறிப்பு:**

நான்கு சீர்கள் கொண்டது ஓரடி இரண்டடிக்கோர் எதுகை பெற்று, முதல் சீரிலும் மூன்றாம் சீரி அடி தோறும் மோனை அமையும். நான்கு நான்கு அடிகளாகவும் எழுதலாம். எல்லா அடிகளையும் ஒன்றாக இணைத்தும் எழுதலாம். நான்கடி நான்கடி என்றால் ஒவ்வொரு பாட்டையும் முடிக்கும்போது ஏகாரத்தில் அல்லது ன் வைத்து முடிக்க வேண்டும். இல்லையேல் ஒன்றாக இணைத்து எழுதினால் வத்தும் முடியும் போது, ஏகாரத்தில் அல்லது ன் வைத்து முடிக்க வேண்டும்

திரு நெருப்பலைப் பாவலர் இராம. இளங்கோவன்

## நிலைமண்டில ஆசிரியப்பா

1.நயனிலச் செய்தோரின்
நட்பினைக் காத்தே
பயனிலச் செய்வதைப் பார்த்திடக் காய்ந்தே
நயமாய்த் தடுத்தல் நயம்.

2.ஒல்கிய நண்பனை ஒல்லெனத் தாங்கியே
அல்லதை நீக்கிட அன்பாய் அரவணைத்தே
நல்லதைச் செய்தல் நலம்.

3.அழிவையே நாடி அறமல்லச் செய்தே
அழிவின் விளிம்பிலே அல்ல லுறவே
கழித்தே அணைத்தல் கடன்.



கவிஞர் செ. கலைவாணி. மேட்டூர் அணை

சிந்தனைகளின் தடங்களில்
நீண்டு பயணிக்கிறேன்
எல்லாமே நீயாயிருக்கையில்
எனக்குள் சொர்க்கம்

கலைந்து கலைந்து
சேரும் மேகங்கள்
என்னைக் கலைத்திட்டு
சேர்க்கும் உனைப்போல

எதையாவது நீ
பேசிக்கொண்டே இரு
நான் பேசாமல்
காதலித்துக் கொண்டே

மௌனங்களை முகமூடிகளாய்
அணிந்திருக்கிறோம் நாம்
நத்தையாய் ஊர்கிறது
நம்மிடையே நேரம்

ஆக்கவும் இயலாது
அழிக்கவும் முடியாது
காதல் அழிவின்மை விதி
உயிர்ப்பிக்கிறது நம்மை நாளும்



கவிஞர் ராஜ் ஆரோக்கியசாமி, பிச்சாண்டார் கோவில்

# சூது

## அதிகாரம் : 94




வெற்றியாளன் சூதாடான்
ஆடினாலவன் வெற்றியெலாம்.
தூண்டிலுணவை இரையெனவிழுங்கும்
மீனின் நிலையாய்ப்போம்.

ஒன்றீட்டியதன் மயக்கத்தில்
நூறையிழந்து வறியராகும்.
சூதாடிக்கு நன்மையடையும்
நெறி என்றுமிலையாம்.

சூதுக்கட்டை யுருட்டி
ஈட்டுபொருளும் வருவாயும்.
சடுதியில் அவனைநீங்கி
எதிரியைச் சென்றடையும்.

துன்பம்பல இழைத்து
புகழ்கெடுக்கும் சூதாட்டம்போல்.
ஒருவனுக்கு வறுமைதருவது
வேறொன்று மில்லையாம்.

சூதாட்டக்கருவியும் களமும்
கைத்திறனுமா மிம்மூன்றும்.
கைவிடார் பெருஞ்செல்வராயினும்
ஏதுமிலாதா ராகிடுவராம்.

சூதென்னும் மூதேவியால்
சூழப்பிடிக்கப் பட்டோர்.
இம்மையில் பசியும்
மறுமையில் நரகமுமடைவர்.

நற்பயனிழைக்குங் காலங்களெலாம்
சூதுகளத்தில் கழிந்திடினஃது.
தொன்றுதொட்ட செல்வவளத்தையும்
நற்பண்பையுங் கெடுத்தழிக்கும்.

சூதொருவனின் பொருளழித்து
பொய்யனாக்கி அருள்கெடுத்து.
பலவகைத் துன்பத்தாலவனை
வருந்தி அழச்செய்யும்.

சூதாடிக்கு புகழுடன்கல்வி
செல்வத்துடனுணவு உடையுமாம்.
இவ்வைந்தும் ஒருசேர
அவனைவிட் டகன்றுபோம்.

துன்பத்திலுழன்றாலும் உயிர்
வாழவே விரும்புமாப்போல்.
பொருளிழப்பு மேலோங்கிடினும்
சூதையே மனம்விரும்பும்.

கவிஞர் ஆன்றனி ஜமுனா, நாகர்கோவில்

# வாட் போர்



பெண்களுக்கான உலகம் மிகச் சிறிது
வாளின் உறை போல மிக நீண்டது
வாளின் குறுக்கு போல மிகச் சிறிது
ஒன்றுக்கு மேற்பட்ட வாட்கள் உரசும்

ஆதலால் அங்கே தீப்பொறி பறக்கும்
வாளும் வாளும் மோதும்
கேடயம் நசிந்து போகும்
அதன் கண்கள் கசிந்து பொங்கும்

கொலையும் செய்யும் இந்த வாள்
கொன்று போட துடிக்கும்
நவரச நடிப்பு நடிக்கும்
நாடகம் தினம் தினம் அரங்கேறும்

கேடயம் செய்வதறியாது திகைக்கும்
எந்த வாள் பக்கம் நிற்கும் பாவம்?
ஒன்று தன்னை செய்த வாள்
மற்றொன்று தன்னை வைத்து செய்யும் வாள்

வான் நோக்கி தொழுத கைகள் வாள் நோக்கி தொழும்
ஒதுங்கி நிற்க பார்க்கும்
ஒன்றை மட்டும் உரையில் போட நினைக்கும்
மற்றொன்றை கையில் தாங்க நினைக்கும்

கையில் தாங்கியது காயப்படுத்தும்
கருணையின்றி கொல்லத் துடிக்கும்
ஆயிரம் காயம்! ஆயிரம் காரணம்
காயப்பட்டு காயப்பட்டு கல்லாய் சமையும்

தலைமுறை மாறியாச்சு
அடுத்த வாள் வந்தாச்சு
அடுத்த களம் கண்டாச்சு
களங்கள் மாறும்! காயங்கள் தொடரும்
இது மாமியார் மருமகள் கதை என்று கொண்டால்

வீடுதோறும் வாசல் எனக் கண்டால்
ஆண்களின் இதழோரம் சிறுநகை கண்டால்
கவிஞரின் உள்ளம் களிக்கும்! தமிழ் செழிக்கும்

கவிஞர் முனைவர் கதிர்வேல் தனியரசு திருச்சி

பால்மணம் மாறாத
பிள்ளைகளைச் சுமந்து செல்லும்
அந்தப் பள்ளி
வாகனத்தில்தான்
நித்தமும் பயணிக்கின்றன.
எனது கவிதைகளில்
அடிக்கடி வரும்
பட்டாம் பூச்சிகளிரெண்டும்.



கவிஞர் பாரியன்பன் நாகராஜன், குடியாத்தம்

# சீவக சிந்தாமணி

## (பதினைந்து)

3. குணமாலையார் இலம்பகம்

காசறு துறவின் உள்ளம் வெள்ளை
மாசறு கதிரவன் மேற்கே பயணம்
ஆசைகள் தூண்டி மன்மதன் விளையாட
பாசமுடன் மகிழ இளவேனில் வந்தது

வழி நெடுக ஊர்திகள் வண்டிகள்
ஓலி மாறாத இராசமாபுரம் மின்னியது
சலியாத மக்கள் ஆடல் பாடல்
ஓலிஒளி பிணைந்து வானுலகை அடைந்தன


பாலாவி துகிலில் சுரமஞ்சரி, குணமாலை
நூலறிவு கேள்வி ஞாலம் பெற்ற அழகிகள்
பால்யம்முதல் இணைபிரியா தோழிகள்
பொழிலில் விளையாடி சிரித்து மகிழ்ந்தனர்
(பொழில் : பூந்தோட்டம் )

அவ்வமயம் சுரமஞ்சரிக்கு சந்தேகம் வந்தது
இவ்வருமை சுண்ணத்தில் சிறந்தது எது?
என் சுண்ணம் வந்தனபோலும் அருமை
நின் சுண்ணம் இதற்கு ஈடாகுமா?''

சந்தேகக் கோடு சபைக்கு வந்தது
அறிந்து ஆராய்ந்தனர் அறிஞர் பெருந்தகை
குறிப்பாக இதுவா அதுவா எதுவென்று
அரிதியிட்டு சொல்லவில்லை தடுமாறினர்

முடிவு சொல்ல ஒருவனே சீவகன்
பரிகாரம்தேடி அவனிடம் சென்றனர்
இரு சுண்ணப்பொடிகளை பரிசோதித்தான்
அருமையாக பதில் கூறினான்,"குணமாலை"

மீண்டும் பாலையானது சோலைவனம்
மாண்டு விடுவேன் துடித்தாள் சுரமஞ்சரி
தூண்டுதல் இன்றி தலைக்கேறியது சினம்
தீண்டும் இன்பம் அறியாது கதறினாள்




வெற்றி வாகை கரவொலி குணமாலை
பற்றுதல் இன்றி கோபத்தில் சுரமஞ்சரி
சற்றும் எதிர்பாராமல் பகையாளி ஆயினர்
முற்றும் துறந்து சூளுரைத்தாள் சுரமஞ்சரி

என் சுண்ணம் சரியில்லை என்றானே
எனக்கு ஏற்பட்ட பெரும் அவமானம்
தன் தோழி குணமாலை வெறுத்தாள்
என் மதிப்பு தெரியாத சீவகனே

"உன்னை என் காலில் விழவைப்பேன்
என் சபதம் ஊர் அறிய கேளுங்கள்
ஆடவரை ஏறெடுத்து நோக்குவேன் அல்ல
அவன் என்னை விரும்பும்படி நோற்பேன்

இதைக் கேட்டு பெற்றோர் கலங்கினர்
எதை வைத்து இவளை சரிசெய்வது
பதைபதைத்தார்கள் தாயும் தந்தையும்
இதற்கான பதில் காலத்தின் கையில் .

தொடரும்...

கவிஞர் ஞ.திருக்கொழு

# இந்த ஓர் இரவைக் கடந்துவிட்டால்

இதயமதில் ஆயிரம் எண்ணங்கள் தோன்றிடும்
மனமும் பாரம் தாங்காமல் துவளும்

ஆசையது கானல்நீராய் கண்முன்னே நிழலாடும்
ஏமாற்றம் அடைந்து சஞ்சலம் தோன்றிடும்
வாட்டும் இதயமும் கனலாய் எரியும்

ஏக்கத்தில் தூக்கத்தை தொலைத்த இரவுகளே
இந்த ஓர் இரவைக் கடந்துவிட்டால்

விடியலில் பூபாளத்தின் ஓசையாய் வசந்தமே
வருத்தம் மாறியே குதூகலம் வந்திடுமே

ஊதியம் வாங்கும் கரங்களுக்கு ஆனந்தமே
நிலைமை மாறிட புன்னகை பூக்குமே

அனைத்தும் நலமாகிட கனவது நிறைவேறுமே
வாட்டமது விலகிட இனிமை வந்திடுமே

வாழ்வில் வர்ணமது வண்ணமாகி மிளிர்ந்திடுமே
உறவும் உள்ளம் உவந்து களிப்பாகுமே

இருளும் விலகியே வெளிச்சமும் வந்திடுமே
ஏழையின் நெஞ்சமது நெகிழ்ந்திட சந்தோசமே

வறுமையும் மெல்ல மெல்ல அகன்றிடுமே
உழைப்பின் உன்னதம் வியர்வைத் துளிகளே.



கவிஞர் ப. வெங்கட லட்சுமி காந்தன், விருதுநகர்

# உன்னால் முடியும்

உடைக்கும் தருணத்தை கண்டு
உருகுலையாதே அதுதான்
உன்னை உருவாக்கும் தருணம்
உன்னுள் இருப்பதை
வெளியே கொண்டுவரும் தருணம்.

உன்னை உருவாக்க
உன்னால் மட்டுமே
முடியும்.

நன்றி இறைவா!



கவிஞர் ஜெ. தேவி ராஜசேகர், சென்னை

*பா வகை* -குறள்வெண் செந்துறை (எண்சீர் வருவது) குறைந்தது மூன்று பாடல் எழுத வேண்டும்.
(காய்+ காய்+ காய்+ மா)



உயர்வென்றும் தாழ்வென்றும்
ஒருபோதும் இல்லை!
உணர்வுகளால் ஒன்றுபட்டே தொட்டிடுவோம் எல்லை!
இயல்பாக இருந்திடாமல்
வகுக்கின்றோம் பிளவே!
இதனாலே இழக்கின்றோம்
பெரிதளவே மாண்பே!

மொழியாலும் நிறத்தாலும்
வேற்றுமையும் உண்டே!
மொழிந்திடுவாய் களைந்திடுவாய்
ஒற்றுமையும் கண்டே!
விழியெனவே போற்றிடுவாய்
ஒற்றுமையை என்றும்!
வீறுகொண்டே நடந்திடுவாய் தரையினிலே நன்றே!

என்றென்றும் பெற்றிடுவாய்
எழிலான எண்ணம்!
ஏற்றமுடன் உயர்ந்திடுவாய்
உலகினிலே திண்ணம்!
இன்னமுதாய் ஒற்றுமையை
உன்னுள்ளே விதைப்பாய்!
என்றுமேநீ வேற்றுமையை
மாந்தரிலே களைவாய்!

கவிஞர் விஜயலஷ்மி தாளிதாசன், கோவை மாவட்டம்

# வனப்பு தரும் தமிழ்

முளரிப்பூவின் சிரிப்பில்
அகம் மலரும் கன்னி.
பனிப்பொழுதில் மனதை
ஈரமாக்கி அன்பை விதைத்து
மகிழ்ச்சி அறுவடையாகும் நாள்.

நம்பிக்கை நிலத்தில்
துளிர்த்த ஒற்றை மரம்.
வறண்ட காற்றைப் பருகி
நாள்களை நகர்த்தும் நாணல்.

வறுமை தின்ற பொழுதுகள்
விடியல் தேடிய விழிகள்
வண்டமிழ் சொல்லெடுத்து
வளவன் பெயர் சொல்ல
வளமை வாசல் தீண்டும்.
வறுமை தீர்க்கும் தமிழ்.
வனப்பு தரும் தமிழ்.



கவிஞர் செ. தமிழ் நேயன், தமிழ் நாடு

# தாங்கும் மரம்

ஒரு சருகு உதிர்வது போல
தாங்கு மரத்தை
விட்டும் செல்வார்கள்
பின்னும்
காலச் சாகரத்தில்
ஓய்ந்து கொள்ளவென
உன் கிளை நாடி
மீண்டு வரவும் செய்வார்கள்
அப்போதும் நீ
தாங்கு மரமாகவே
இருப்பாய்



கவிஞர் மரு ஜலீலா முஸம்மில், ஏறாவூர் (இலங்கை)

# தெருநாய்

உறக்கம் கலைய நேரமாக
விருப்பம் இல்லாமலே வெளியேறி
நடக்க ஆரம்பிக்கவும்,
நடைப்பயிற்சி முடிந்து
தேநீர் கடையிலும்
காஃபி ஷாப்பிலும்
கூட்டம்.

கூடவே வழக்கமான
மனித நண்பரைத் தேடும்
தெருநாய்கள் விடாது
வாலைசைத்து சுற்றி வரும்

அவர்கள் சிறு வட்டிலில் ஊற்றும்
தேநீருக்கும் காஃபிக்கும் பொறை பிஸ்கட்டுக்கும்,

வாலை சுழற்றி தம் அன்பையும்
ஆவலாதியையும் காட்டும் காட்சி;
அலாதிதான்.

கூட்டத்தில் வாலறுந்த நாய் ஒன்று
கிட்டத்திலே வாராமல் எட்டத்திலேயே நிற்க;
அவத்தை அவதியுடனும்,
வேட்கையின் மெலிவுடனும்,
மெதுவே மெதுவே என் முகம் பார்க்க;
நான் நின்றேன்.



நாய் என்னைச்
சுற்றிச் சுற்றி வந்ததில்,
எனக்குப் புரிந்தது அதன் அன்பு.

வா! காஃபி சாப்பிடலாமா என்று கேட்க;
அது என்னுடன் ஓட்டமும் நடையுமாய்
நடக்க ஆரம்பித்தது;
காஃபி கடையையும் தாண்டி.

வாலறுந்த நாய்க்கு
காஃபி வேண்டாம்;
அறுந்த வாலுடன்,
வருந்திய நாய்க்கும்
வேண்டும் ஒரு அன்பான இதயமும்,
அன்னையைப் போல் அரவணைப்பும்,
காஃபியும்' பொறையும், அதற்கப்புறம்தான்.

கவிஞர் சசிகலா விஸ்வநாதன்

# நீ உயிர் நான் மெய்

அகரத்தில் தொடங்கி னகரத்தில் மடங்கி
சிகரம் ஏறி விண்ணைத் தொடுகிறாய்
மெய்யின் இயக்கம் அகரமோடு பொருந்தும்
மெய்யில் ஏறி உயிர்மெய்யாய் பிறக்கும்
உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பென
புணர்ச்சி விதியால் இலக்கணமே வியக்கும்
என்று பிறந்தவள் !எதனால் சிறந்தவள்?
என்றுணர முடியாத இளமையளாம் தமிழ்மொழியே
எம்மொழி செம்மொழி என்பதே எம்பெருமை
செந்நாவால் உச்சரித்தால் உணரலாம் உனதருமை
திருக்குறள் உந்தன் திறம் கூறும்
இருள் நீக்கும் அறம் கூறும்
திருப்புகழும் தனித்தமிழில் கந்தன் புகழ்பாடும்
தமிழ் மொழியே தமிழர் தாய்மொழியே
தயங்காமல் வருவாய் எந்தன் வாய்வழியே
சிலம்பும் மேகலையும் மெய்க்கு அணிகலனே




கவிஞர் ஸ்ரீ. ஜெயந்தி, சிதம்பரம்

# விழு! விரைந்தே எழு!



வரைந்த ஓவியங்கள்
கரைந்தாலும்,
தூரிகையே உன்
நிறம் மறவாதே!

புழுபூச்சுகள் மட்டுமே
கடந்தாலும்,
புல்லே உன் நிழல்
உயரம் மறவாதே!

ஒரே இடத்தில்
இருந்தாலும்,
மரமே உன்
வேரினை மறவாதே!

ஒரே நாளில்
வாடினாலும்,
மலரே உன்
வாசம் மறவாதே!

எடுத்த முயற்சிகள்
கரைந்தாலும்,
கொடுத்த உழைப்புகள்
கடந்தாலும்,

இருக்கும் வாய்ப்புகள்
இழந்தாலும்,
ஓடி களைத்து
வாடினாலும்,

விழுந்தாலும்
விரைந்தே எழு
மழைவிழும் நொடி
எழும் மண்வாசம் போல்!

கவிஞர் நூருல் நய்மா அனீஸ்

# எனை ஆளும் இளம்தளிரே

புனையா ஓவியம் நீ
புதிரான புத்தகம் நீ

திகட்டா செங்கரும்பு நீ
தித்திக்கும் தேன் துளி நீ

மலரா அல்லியும் நீ
மணக்கின்ற பூச்சரம் நீ

கனியா முக்கனி நீ - எனை
கவர்ந்திடும் புல்வெளி நீ

மார்கழி கோலமும் நீ
மாசிலா வீணையும் நீ

தலை முதல் கால்வரை
தளிர் கொண்ட பேரழகே

ஒப்பனையற்ற பூந்தளிரே
ஒப்பிட முடியா பேரமுதே

உலக இன்பங்கள் தன்னால்
தோற்று போகும் உன் முன்னால்

இளங்குருத்து உன்னால் - என்
இதயம் இயங்குது இந்நாள் !



கவிஞர் க. இராஜேஸ்வரி கணேசன், புதுவை

# விடுதலை



கூட்டில் வாழ்ந்த பறவை
கூண்டில் அடைத்தால்.
சிறகில் விலங்காக
பறக்க முடியாமல்.
விதிக்கப்பட்ட
விதியோவென.
விதைத்த விதைகளாலான
எண்ணங்கள்.

அடிமைகளாக வாழ
அடியெடுத்தே வைத்திட.
அன்னதான நெரிசலில்
அன்றைய அல்லாடலில்.
விடுதலை வேட்கையில்
விடுவிக்கப்பட்ட நாட்களாக.

ஏக்கங்களோடு ஏங்கும்
உள்ளங்களில் உடைபடும்.
ஏறெடுத்துப் பார்த்தே.
ஏதிர்த்து நிற்கும் உணர்வுபூர்வமான
வேலைக்காக.
வானதூதன் வருவதற்கான
கனவுகளோடே.

உயர்ந்த பட்ச
போராட்டங்களோடு.
வந்த விடுதலைக்கான
கொண்டாட
புதிய அடிமையாக
அரசியல்வாதிங்க கைகளில்

கவிஞர் இரஜகை நிலவன், மும்பை

# விண்மீன்கள்

இரவைத் தொலைத்த
இரட்டை விண்மீன்கள்!
ஏழ்மைத் தத்தெடுத்த
மழலை செல்வங்கள்!

உருவமற்ற இறைவனுக்கு
இந்நிலை தகுமா?
பெற்றவர் பிரிந்தாலும்
உற்றார் பிரியலாமா?

தன்னிலை மறந்து
தாயானான் தமையன்!
புரியாமல் நனைகிறான்
பாசத்தில் இளையோன்!

இவர்களை கண்டு
கருடனுக்கும் கலக்கமா?
இதைச் சொல்ல
என் மனம் மறுக்குமா?



நம்பிக்(கை)யை பிடித்து
நடக்கப் பழகு!
போராட்டம் ஒன்றே
உனக்கு அழகு!

உன் தோல்வி
இறுதியாகும் ஒருநாள்!
அன்றே உன் வெற்றி
உறுதியாகும் திருநாள்!

கவிஞர் அனல் நிலவன், கொசவபட்டி, திண்டுக்கல்

# வெண்ணிலவு சாரல்

துள்ளத் துடிக்கும்
அன்பின் வாசம்
வெண்மணல் பரப்பில்
வேதனையைக் கூட்டிட

வாழ்த்தை மறந்த
ஒற்றை நடுகல்
வற்றாத பாலையில்
இன்னுயிர் வாடிட

துணையென இருந்த
ஒற்றைச் சருகும்
காற்றின் பிடியில்
கவனம் சிதறிட

வேர்த்துக் கொட்டிய
மொட்டை மரமாய்
தனிமையின் பிடியில்
வெந்து நோகிறேன்

உள்ளம் கசக்கி
உணர்வைக் கொன்று
நெருப்பைக் கக்கிடும்
வெண்ணிலவு சாரலாய்



கவிஞர் நிவேதிகா பொன்னுச்சாமி

# காதல் தேர்தல்

காதல் சுகமானது புனிதமானது அழகானது
காத்திருந்த காதலில் புரிதல் உள்ளது
காலம் எல்லாம் காதல் சொல்லியது
காற்றாய் சுவசமாய் என்னோடு வருவது
காவியத் தலைவனின் இதயம் துடிப்பது
கானமும் கேட்டு வெட்கத்தில் நாணுவது
காதோரம் பேசிய இரகசியத்தோடு இழுத்து
காந்த கண்ணால் பார்வைப் பார்த்து
காலகாலமாய் அவளும் நானும் இணைந்து
காப்பியம் பேசும் ஓவியமாய் வரைந்து
காலையில் பூத்த பூவாய் மலர்ந்து
காதல் தேசத்தின் தோட்டமாய் காட்சியளித்து
கால் கொலுசின் ஓசையும் ஒலித்து
காட்சியாய் என்னோடு படம் பிடித்து
காதல் தேர்தலின் சின்னமாய் காண்பது
அவளோடு நான் என்னோடு அவள்



கவிஞர் ம. செ. அ. பாமிலா பேகம்

# செய்தித்தாள்

காலைநேர தேநீர் கோப்பையின்
அறிமுகம் செய்தித்தாளின் வழியே சூடாய்

அலைபேசியின் அரவணைப்பில் உலகமே
நித்திரை கொண்டாலும்

செய்தித்தாளின் வரிகள் கண்களுக்கு
வானவில் தோரணங்களாய்

உலகத்தின் உண்மைகள் நமது
திண்ணையில் செய்திகளாய்

ஒரு சில பக்கங்களில் பல நூறு
செய்திகளின் அணிவகுப்பு அசத்தலாய்

இந்த காலை நேர காகித குழந்தைகள்
இன்றும் பல வீடுகளில்

தினந்தோறும் தவழும் புன்னகை
பூக்களின் இதழ்களாய்

கரங்களில் செய்தித்தாள் ஏந்தும்
நிமிடங்கள் மனத்திற்குள் மகிழ்வின்
பரவசங்களாய்



கவிஞர் ஸ்ரீ. பிரேம் சுரேஷ், கோத்தகிரி

# உன் நினைவில் நான்



இருள் நிறைந்த வேலையில்
என் மனம் நிறைந்த அவளுக்கு
என் இதயத்திலிருந்து
நள்ளிரவிலும் விழி விழித்து
உன் நினைவில் நான்.

எப்படி சொல்லுவேன் நான்?
உன்னைத்தான் பிடிக்கும் ;
உன்னை மட்டும்தான் பிடிக்கும் என்று.

அவ்வளவாக பழகவில்லை;
அளவாகத்தான் பழகினோம்.
என்னை அறியாமல் உன்னோடு நான் புலம்ப;
நீயோ கீறிய கோடு தாண்டாத
எல்லை வீரனைப்போல அளவாய்.

உன்னை பல தடவை பார்க்கவில்லை
ஒரு தடவை என்றாலும் ;
ஆழமான அர்த்தமுள்ள பார்வைதான்.

உன்னை பார்த்து என் இதயத்தில்
இடம் கொள்ள வைத்த இறைவன் ஏனோ;
உன் இதயத்தில் இடம் கொள்ள வைக்கவில்லை.

நீ என்னைத்தான் விரும்பவேண்டும் என்று
நான் சொல்லவில்லை-என்னிதயத்தில்
உன்னைத் தவிர யாரும் இல்லை
என்று சொல்லுகின்றேன்.

*ஆம்*, என்றால் சொல்லு;
உன்னை காலம் முழுதும்
பத்திரமாய் பார்த்திருப்பேன்.

எவர் உன்னை நேசித்தாலும்;
என் நேசத்தை மிஞ்சாது.
அறிவாயா நீ என்னை
புரிவாயா நீ என் அன்பை

உள்ளத்து உணர்வுடன்
என்றும் உன்னை
எதிர்பார்த்தவனாய் நான்.

கவிஞர் அஹ்மது அப்பான், சேனையூர் சோலை (இலங்கை)

# விதி

எதிர்பார்ப்பு உள்ளவளையும்
எதிர்பார்ப்பு இல்லாதவரையும்
இணைத்து கடவுள் செய்த விதி விளையாட்டில்
அவள் அப்படி என்ன எதிர்ப்பார்த்துவிட்டாள்
யாரிடம் எதிர்ப்பார்த்தாள்
அவள் மணந்தவனிடம்தானே
காதல் செய்யும் போது சில விடயத்தை
சகித்து கொண்டவள் வாழும் போதும்
உனக்கேன எல்லாவற்றையும் சகித்தும்
அவள் எதிர் பார்த்தவைகளையும்
சிதைத்து  கொள்வது ஏனோ?



கவிஞர் டிரோன் மருளி, ஜப்பான்

# எழுதுகோலுக்கு நன்றி

எழுதுகோலால் கிறுக்கலானேன்.
ஏதோ ஒன்றை
காகிதத்தில் வடிவமைத்தேன் .

இன்னும் புரியாத வலிகளுடன்
கேள்விகள் பல என்னுள்ளே.
என்னை சுற்றி வட்டமிட்டதே.

காலம் கடந்து போனதுவே...
எழுதுகோலின் மையும் தீந்துவே.
தோன்றா புதுவித
எண்ணமும் தோன்றியதே.

திரும்பி பார்த்தேன்
எழுதிய வரிகளை.
தன்னம்பிக்கை
தந்ததே என்னில்.
என் பிறப்புக்கு அர்த்தம்
கிடைத்ததுவே.



எனக்கு பல உறவு
களும் கிடைத்தே.
எனது வரிகளுக்கு
உயிரும் கிடைத்ததே.

எழுதுகோலே வியம்புகிறேன்
உனக்கு நன்றி.
வாழ்த்துகிறேன்
உன்னையே.

கவிஞர் ஏ. எம். முர்ஷிதா பேகம், கண்டி (இலங்கை)

# வாழ்க்கைக் கணக்கு

கூட்டலும் கழித்தலும் பெருக்குதலும்
வகுத்தலும் நிறைந்தது வாழ்க்கை
மகிழ்ச்சியைக் கூட்டுவோம்
கோபத்தினைக் கழித்திடுவோம்
சுற்றமும் நட்பையும் பெருக்குவோம்
செலவினங்களை தேவைக்கேற்ப வகுத்தே செய்வோம்

முகநூல் கணக்கு உண்டு
மூவாயிரம் நண்பர்கள் அதிலுண்டு
முன்னின்று பார்த்து பேச
மக்கள் ஒருவரும் இல்லை

காலனின் காலடிக்குச் செல்லும்போதே
பலருக்கு வாழ்க்கைப்பாடம் புரிகிறது
கொண்டு செல்ல ஒன்றுமில்லை
கண்ணீர் சிந்த யாருமில்லை

செல்லும் வழியெங்கும் கூடவருவது
செய்த நல்வினைகளும் கர்மங்களுமே
சிந்தித்திருந்தால் செல்லும் வாழ்க்கைபயணம்
யாவும் சுகமான ஒன்றாய்



கவிஞர் ஜோதிமணி, தாராபுரம்

# நீதிநெறி நின்றே

சமுகத்தில் உயர்ந்தோர் தாழ்ந்தோர் பேதமில்லை
சுமுக வாழ்வின் சுற்றமும் சுகமானதே
பாசப் பிணைப்பில் பண்பாய் சிறந்து
நேச நினைப்பின் உண்மை விளக்குமே

கொடுமை கண்டு பொங்கும் எண்ணமும்
கொடுஞ் செயலை அரணாய் தடுக்குமே
தனக்கென வாழா தாராள குணமும்
பிறர்க்கென தணிந்து தங்கமாய் மின்னுமே

சிலரின் பல்வித வன்ம குணமும்
பலரின் வாழ்வில் துன்பத்தை அளிக்குமே
ஏழ்மையைக் கண்டு விலக்கும் பண்பே
கோழையை விடவே தாழ்மை மனமே

கல்வியில் சமுகநீதி உலகை வென்றது
வீதியில் வரவேண்டும் மானுட சமத்துவமே
மடமை வாழ்வை துணிந்து நீக்கியே
சிறுமை நெஞ்சம் சிறப்பது என்றோ

இம்மை உலகில் உதித்த நாமும்
மறுமை நினைத்து மனிதம் எண்ணாமல்
வாழ்வது ஒருமுறை பூஉலகு நமக்கே
வெல்வோம் சமுகத்தின் நீதிநெறி நின்றே



கவிஞர் பி. அன்பழகன், கடலூர்

# கல்வியின் மேன்மை

மாக்களை மக்கள் ஆக்குவது கல்வியே!
காட்டு வெள்ளத்திலும் அடித்து போக முடியாத கல்வி,
நெருப்பாலும், கள்வர்களாலும் கொண்டு போக முடியாத கல்வி
இறுதிக்காலத்திலும் கூட கற்ற கல்வி துணைவருமே!

செல்வந்தர்களுக்கோ இருக்கும் இடத்தில் மட்டும் சிறப்பாம்
கற்றவர்க்கோ செல்லும் இடமெல்லாம் சிறப்பாம்
கல்வி கற்றவர்களுக்கு செல்வம் தானே தேடிவரும்
கல்வியின் வேர்கள் கசப்பாம் ஆனால் பழம் இனிப்பாம்



கவிஞர் ஆ. கிருஷ்ணவேணி, ஊத்தங்கரை

# காதல்

இரண்டு உயிரை
பைத்தியமாகாமல்
பைத்தியமாய் அலைய செய்யும்
பருவ கோளாறு
காதல்



கவிஞர் இரா. சங்கர், ஈரோடு

# ஆரணங்கே!

ஆரணங்கே உந்தன்
அணிகலன்களில் சிறந்தது
போற்றுதற்கரிய
உயரிய கற்பே

உடலை உடமைகளை
கண்ணெனப் பாதுகாத்திட
வாழ்வு வனப்பாகி
வாலிபத்தைக் காப்பாற்றும்

உள்ளத்தை மகிழ்விக்கும்
இலக்கணமாம் அன்பை
பக்குவமாய் திட்டமிட்டு
பதவி சாக வாழ்ந்திடு

உதிரும் நாட்கள் உலகில் செழித்திட
கண்ணியமான உழைப்பால்
கௌரவமாக நிமிர்ந்திடு

பெண்ணின் பெருமை மண்ணில் சிறந்திட
உறவுகளை அரவணைத்து
அகிலத்தை ஆண்டிடு

பிறந்தோம் வாழ்ந்தோமென
வாழ்நாட்களை வீணாக்காது
உயர் பிறப்பின் மாண்பை
உணர்ந்தே சிறந்திடு



கவிஞர் மாஹிரா ஹமீட் அஸ்ஹர், இலங்கை

# கடைசியும் ஆரம்பமும்

இங்கு
பல சந்தர்ப்பங்களின்
கடைசி நிமிடங்கள் தான்
புதிய அத்தியாயத்தின்
ஆரம்பமாகின்றன



கவிஞர் கீர்த்தனா பு, திருப்பூர் மாவட்டம்

# இளைஞர்களே ஓடி வாருங்கள்

ஓடி வாருங்கள் இளைஞர்களே ஓடி வாருங்கள்
உண்மை அன்பு நேர்மை கொண்டு
அன்பு வளர்த்து மகிழ்ந்திடுவோம்.

ஓடி வாருங்கள் இளைஞர்களே ஓடி வாருங்கள்
இயற்கை போற்றி இயற்கையுடன் இயந்து
இன்ப வாழ்வு கண்டிடுவோம்
இனிமை மாறாமல் வாழ்ந்திடுவோம்.

உண்மை நேர்மை வாழ்வோடு
உறுதி கொண்ட நெஞ்சம் கொண்டு
ஊழல் என்னும் பெரும் பேய் இல்லாமல் ஆக்குவோம்.

ஓடி வாருங்கள் இளைஞர்களே ஓடி வாருங்கள்
அறம் தவறும் அரசர்களையே கேள்வி கேட்ட நாட்டிலே
பதுக்கல் பெருவழிகள் கடத்தல் கயவர்களை
களை எடுக்கும் காலம்தான் இனி என்றும் வளம்தான்.

*பாலியல் கொடுமை* என்னும் பாவ செயல் ஒழிக்க
ஒன்றுபட்டு போராடி வேரோடு அழித்திடுவோம்.

ஓடி வாருங்கள் இளைஞர்களே ஓடி வாருங்கள்
ஒன்றுபட்டு போராடி உரிமைகளை பெற்றிடுவோம்
*சமதர்ம சமுதாயம்* தழைத்திட ஒன்றுபட்டு
உழைத்திடுவோம் ஓடி வாருங்கள்
இளைஞர்களே ஓடி வாருங்கள்.



கவிஞர் ஜேப்பி@ பன்னீர்செல்வம், சேத்தியாத்தோப்பு

# கட்டமைப்பு

அன்று
கால் கடுக்க நடைபயின்று
காத்திருந்து கடந்த பயணங்கள்
சகிப்புத்தன்மையின் கட்டமைப்பு

முகம் காணா உறவுகளோடு
கடிதத்தில் பகிர்ந்த வார்த்தைகள்
பாசத்தின் கட்டமைப்பு

ஆடைகள் முதற்கொண்டு
அலங்காரம் வரை பாரம்பரியம் தொட்டது
ஒழுக்கத்தின் கட்டமைப்பு

கூட்டுக் குடும்பங்களின் வழியில்
பின்பற்றிய நாகரிகங்கள்
பண்பாட்டின் கட்டமைப்பு

இரவு உணவில்
ஈரமதியின் முகில்களோடு உரையாடல்
குடும்பங்களின் கட்டமைப்பு

வீடுகளின் வாசற்படிகள்
வாஸ்து பார்க்காமல் மனிதர்களை பார்த்தது
சமூகத்தின் கட்டமைப்பு

இன்று
விரும்பினும் விரும்பாவிடினும்
அலைபேசியின் கட்டமைப்பிற்குள்
அத்தனை அமைப்புகளும்



கவிஞர் அன்னிலட்சுமி சரவணன், ஈரோடு

# பெண் வள்ளல்களே!

கண்ணால் தரம் பார்த்து
வாயால் விலை பேசி
காதால் பேரம் கேட்டு
கையால் தொட்டு வாங்கி

காலால் நடந்து சென்று
மனதால் திட்டமிட்டு
மூளையால் சிந்தித்து
மூக்கால் வாசனை பிடித்து

நாவால் ருசி பார்த்து
அன்பால் சமைத்து
அறுசுவையாய் விருந்திட்டு
ஆர்வத்தோடு பந்தியிட்டு
இன்முகத்துடன் கவனித்து

ஈகையுடன் பரிமாறி
உறவுகளுக்கு கொடுத்திட்டே
ஊமையாக இருந்திட்டு
எல்லாவற்றையும் சாப்பிடவைத்து

ஏமாற்றமில்லாமலே காய்களையும்,
ஐயமின்றி முழுவதும் கொடுக்குதே
ஒற்றை இல்லத்தரசியுமே
ஓர் வேளை மீதமில்லாமல்
அவ்வளவையும் பிறருக்காக,
தியாகம் செய்யும் பெண் வள்ளல்களே!



கவிஞர் நீலாசுபாஷ், ஆக்கூர்

# காதல் கையேடு

ஓரவிழிப் பார்வையில் என்னை
உருக வைக்கிறாய்!
கடைக்கண்ணால் காதலை
கடத்துகிறாய்!
மனதிலாடும் ஆசையை
மாமன் நெஞ்சில் பதிய
வைக்கிறாய்!
ஏக்கப் பார்வையில் எட்டிப்பார்க்கும்
ஏந்திழையே!
என் காதல் கையேட்டில்
அழுத்தமாய் முத்திரை
பதித்து விடு!
உன் காதல் மை கொண்டு
நிரப்பிடாத பக்கங்களை
நிரப்பிவிடு!



கவிஞர் லதா சுப்ரமணியன், சென்னை 119

# கலையாத கனவாய்

தலை கோதி வருடிடும் பாசமதுவும்
விலை மதிப்பில்லா அன்பும்!
கள்ளம் கபடமில்லா நேசமும்
வெள்ளை மனதுடன் வெகுளியாய் வெளிவரும் பண்பும்!

ஆறுதல் கூறி அணைத்திடும் தோழமையும்
வீறு கொண்டு எழுந்திடும் விவேகமும்!
கண்களில் தெரிந்திடும் கருணையும்
விண்ணளவு உயர்ந்திட்ட நம்பிக்கையும்!

பிறருக்கு உதவிடும் கொடையும்
அறம் செய்து வாழ்ந்திடும் வாழ்வும்!
துச்சமென தூக்கி எறிந்திடும் அவநம்பிக்கையும்
பச்சைப் பிள்ளையாய் சுயநலமில்லா நேரமும்!

கனவுகளில் என்றும் வாழா தருணமும்
நனவினிலே வாழும் எதார்த்தமும்!
தோல்விதனை ஏற்றிடும் பக்குவமும்
வெற்றிதனை கொண்டாடும் மகிழ்ச்சியும்!

மனிதரை மனிதராய் காணும் குணமும்
இனிமையாய் அனைவரிடமும் பேசிடும் வார்த்தைகளும்!
கலையாத கனவுகளாயும் கனவுதனை நனவாக்கிடும்
நன்மையாயும் இருந்திட்டால் என்றும் ஆனந்தமே!



கவிஞர் இரா. கோமதி, பொள்ளாச்சி

# அழகிய வாசல் திறக்கிறது

இறை நேசகர்களின்
இதய மலர்கள் வாசப்பூக்களால்
நிறைந்து நறுமணம் வீசுகிறது
நந்தவனக் காற்று
ரையானின் வாசலால்
நாற்றிசையும் பரவிடட்டும்

விரட்டப்பட்ட ஷைத்தான்
விலங்கு பூட்டப்படும்
மாதமொன்று மீண்டும் வருகிறது
விரதமிருந்து கேட்போருக்கு
விருந்தளிக்க அர்ஷைச் சுமந்தவன்
காத்திருக்கிறான்

பசியில்லாத இறைவனை
பசி பொறுத்து உணர்ந்திட
பங்குனியில் வாசல் திறக்கிறது
இனமத பேதம் இன்றி
யாதும் ஊரே யாவரும் கேளிர் என
யாவரும் நலமே வாழ்ந்திடட்டும்

ஏழையின் ஆடையை
பட்டினியின் வாடையோடுணர்ந்து
பணக்காரரும் அணிதலில்
உண்டல்லோ அழகிய பரஸ்பரம்.
ஐம்புலன்களும்
தீமையினின்று விலகிடட்டும்
நற்செயல்களால்
நன்மைகள் நிறைந்து வழியட்டும்



நோன்பெனும் கேடயம் நோற்போருக்காய்
மறைத்துள்ள மருத்துவமும்
பொதிந்துள்ள மகத்துவமும் ஏராளமன்றோ.
கஞ்சனும் மனம் மாறி
கணக்கின்றிக் கொடுத்திடட்டும்
ஏழையின் ஏக்கம் புரிந்திடட்டும்
குறைவிலாது ஈந்திடட்டும்.

இறை மறை இறங்கிய
அருள் மிகு மாதமல்லவா
உள்ளங்களில் உவகையோடு
நானும் நீங்களுமாய் வரவேற்றிடுவோம்.
அஹ்லன் வஸஹ்லன்!

கவிஞர் செண்பகச் சோலையாள் ஆய்ஷா, கம்பளை

# விடியாத இரவு

புத்தகம் வாசிக்கா
நாட்களும் விடியாத இரவும்
ஒன்றாகிறது இவனுக்கு.

நீங்கள் வாழும் உலகில்
நானில்லை நான் வாழும்
உலகில் நீங்கள் இல்லை
தேடலுக்கு மட்டும்
இங்கு பஞ்சமே இல்லை.

இறப்பதற்கு முன்னர்
இலக்கியத்தில் இடம்
பிடிக்க வேண்டும்
இறக்காமல் இருப்பதற்கு.

அறிஞர் அடக்குவார்
ஆறு வகைக்குள்
அந்த ஆறிலும்
அடங்குவதில்லை
நான் கொண்ட அன்பு.



கவிஞர் கோ. தனுசன், மட்டக்களப்பு (இலங்கை)

# விடுதலை

விடியலே நீயும் விடுதலை பெற
விடுமுறைக் கொண்டாயோ
விடாப்பிடியாய் நின்று
உன்னை உணர்த்த
அணர்த்தமாய் நினைந்து
காந்தலாய் சூரியக்கதிர் சுடரை
சொன்னார்கலென்றா. நீயும்
விடுப்பெடுத்துக்கொண்டாய்.



வெளிச்சமே இல்லை
சூரியனையே காணவில்லையென்றதுமே
புலம்பல் தொடங்குதே
மனிதர்களிடத்திலே.

மழையும் விடாப்பிடியாய் வந்து நிற்க
கார்மேகங்கள் கூடி
உலகையே சூழ இருளே
முழுதாகி போனதும் வெளிச்சமே வா
வானமே திற சூரியனே சுடர்க்கொடென
எத்தனை ஓயா ஓசைகள் முழக்கமாகுமோ?

அதொன்றைப் போலவே
இருளாகி போன என் வாழ்வுக்குள்
தேடுகிறேன் விடியலையே
நீ எங்கே இருப்பாயோ
ஜோதியே திரண்டுவா
பாரமான சோதனையே நீங்கி போ.

காற்றே சில்லு சில்லாய்
தேகத்தை தாக்குவதே நீ
நநானென்ன செய்வேனோ
நீயும் ஓரமாகி போ
நானுமே விடியலை தேடுகிறேன்.

சிணுக்க முழக்கம் கடக்காதோ
காலமே வசந்தத்தை தூவாதோ
கன்னம் தொடும் கண்ணீரே
சிந்தும் தூறல் மழையாய்
மண்ணை நனைப்பதைப்போல
நீயும் பசுமை தருவாயோ.

இறையோனே என்ன செய்வேன்
என் வேண்டுதலை
நிறைவேற்றிட நீயும் கேளாயோ
என் பிரார்த்தனையை.

கவிஞர் சஹீனாஸ் பேகம், இலங்கை

# சாத்தியம்

இருக்கும் இடத்தில் இருந்து
கொண்டால் வலிமைகள்
கூட மென்மைதான்
நமதான இருத்தல்களின்
தனிச்சிறப்புகள் மங்காமல்
தனக்காக அமர்ந்து கொள்கிறது
நாம் நாமாக வாழ
எத்தனிக்கும் போது மட்டுமே
இது சாத்தியம்



கவிஞர் சேஹு மொஹம்மது பெனாஸிரா, முஸ்லிம் ஹல்மில்லாவ

சொல்லப்பட்டதுக்கும்
புரிந்துகொள்ளப்பட்டதுக்கும்
கேட்கப்பட்டதுக்கும்
தரப்பட்டதுக்கும்

எதிர்பார்க்கப்பட்டதுக்கும்
நடந்தவற்றுக்கும்
நம்பபட்டத்துக்கும்
மறுக்கப்பட்டதுக்கும்

உள்ள வித்தியாசங்கள்தான்
மனித மனங்களில்
கசப்பையும் பகைமையையும்
வெறுப்புணர்வையும் சேர்க்கிறது

****

<u>அதற்கும் இதற்கும்</u>

எதிர்மறைக்கும்
ஏற்றுக்கொள்ளாமைக்கும்

செல்ல மறுப்புக்கும்
சண்டை விலக்கலுக்கும்

வெட்கத்துக்கும் போங்க



கவிஞர் சுந்தரராஜன், மானாமதுரை

இழந்ததற்காக
மகிழ்ச்சி
நீ கிடைத்தாயே.
*

உன் எண்ணச்சோறு
தின்னத் தின்ன
ஏறுகிறது பசி
*

உன் புன்னகைக்குள்
புதைத்து கிடக்கிறது
என் வீரமும் வாழ்வும்
*

எழுதும் கலைகள்
உன்னைக் கண்டதும்
காணாமல் போயின
*

ஒவ்வொரு நாளும்
ஒவ்வொரு காலம்
உன் அலங்கார வருகை
*

படைப்பின் பொருள்
பிரம்மனுக்குப் புரியவில்லை
உன்னிடம் யாசிக்கிறான்
*

காயம்பட்ட மனசு
குணப்படுத்துகிறது
உன் ஞாபகங்கள்
*



அருகிலிருக்கையில்
அடுத்தது என்ன
உணர்வதேயில்லை மனசு
*

சுவாசமாகிப் போனது
எதிர்பாராத
நம் முதலாம் சந்திப்பு
*

வள்ளுவன் வாரிசா
அறம் பொருள் இன்பமென
அர்த்தமாகிறாய்
*

பாடிய கவிதைகள்
உன்னைக் காட்டும்
காயங்களா காலங்களா

கவிஞர் இளையவன் சிவா

கசங்கி சுருட்டி எறியப்பட்ட
காகிதத்தில் செய்தி இருக்கும்
அது போல தான் மனமும்
***

பெண் குழந்தை பிறந்தவுடன்
உறுப்பை மறைக்கும் கேடு கெட்ட சமுதாயத்தில்
வாழ்ந்து கொண்டிருக்கிறோம்
***

இரவு நேரத்தில் களவு கொல்வதெல்லாம்
சாபம்
எதையுமே ரசிக்க இயலாத சோகம்
***

யாரோ நடந்த இடத்தை தடத்தை
தினமும் அழித்து கொண்டு இருக்கிறோம்
நொடி நேர உலகமிது
****

பெண்ணியம் கிறுக்க
பெண் (pen) தேவை
***

என்றைக்கோ எழுதியது
எனக்காய் தோன்றுவது எப்படி?
வள்ளுவனுக்கு தெரியுமா ?
என்னை
***

மழைக்கால கூரை சடசடப்பு சத்தம்
கேட்க இயலாது போலும்
இனி
***

கூரைகள்
கோவிலாய் தெரிந்தது
மாடிவீட்டிலிருந்து பார்த்தேன்
***



எண்ணங்களின்
முடிவிலி
மொட்டைமாடி
***

நீரின்றி அமையாது உலகென்பது
ஒற்றை சொட்டில் உலகத்தை பிம்பிக்கும்
நீர் சொன்னது..
***

நண்பன் இல்லாதவன்
ஒரிஜினல் அனாதை

கவிஞர் சிரஞ்சீவி இராஜமோகன், கும்பகோணம்

# காலமாற்றம்!



கால்நடையாய்ப் பயணம் மேற்கொண்ட காலம்போய்
கையிழு வண்டிகளில் பயணித்தார் நகரத்தில்!
இழுத்த கைவண்டி ஈட்டிய வருவாயில்
வாழ்க்கை நடத்தியோர் பலருண்டு நம்நாட்டில்!
கையிழு வண்டிகளை மிதியிழு வண்டிகளாய்
அரசாங்கமே முன்வந்து மாற்றியது வரலாறு!
எழுபதுகளில் பயணிக்க ஏற்றதொரு வாகனமாய்
சூழல் மாசின்றி சுற்றிவந்தோம் நகரெங்கும்!
உழைத்துப் பிழைக்க உடலுறுதி கூடியதே!
வாழ்வாதராமாய் விளங்கிய வண்டியிது! பின்னாளில்
தானியங்கி மூவுருளி வருகையினால் விரைவான
பயணத்தை விழைந்தது அவசரமான இவ்வுலகம்!
வியத்தகு மாற்றங்களால் வீழ்ந்தது மிதியிழு வண்டிகளும்!
ஓயாத உழைப்பின்பின்  ஓய்வெடுக்க விழைந்தாலும்
வயிற்றுப் பிழைப்புக்கு வாழ்வாதாரம் இதுதானே!
கைகொடுத்த தெய்வத்தைக் கைவிட மனமில்லை!
புதுவை நகரினிலே சுற்றுலாப் பயணிகள்
இதிலே பயணிக்க விழைகின்றார் இப்போதும்!
மிதியிழு வண்டிகள் காட்சிப் பொருளாக
மாறிவிட்ட இந்நாளில், பயணித்த காலத்தின்
மலரும் நினைவலைகள் மகிழ்வளிக்கும் எந்நாளும்!

கவிஞர் ஈ. சீ. சேஷாத்ரி

## தொண்டரடிப்பொடி ஆழ்வார் -2

பாசுர விளக்கம்:

திருப்பள்ளி யெழுச்சிப்பத்து திருமாலை நாற்பதுவும்
வைணவத்து தத்துவத்தை இறையியலின் கருத்ததனை
விரித்தனவே திருமந்தன் குடிப்பிறப்பே! குருவானார்
மாண்சேனை முதலிதானே! பௌத்தமதம் சமணமதம்
வளரவிடாது சைவவைணவம் தோன்றவளர காரணரே!
தொடர்புடைய பண்டிகையோ அரங்கநகர் வசந்தோற்சவம்
சோழநாடு திருமண்டன் குடியதனில் பிரபவத்து
மார்கழியின் கிருஷ்ணபக்ஷ சதுர்த்திதன்னில் கேட்டைசேர்
செவ்வாயில் தோன்றினாரே! தந்தையோ வேதவிசா
ரதப்பேரார் குடுமிசோழிய பிராமணரே தொழிலதுவோ
விஷ்ணுதனை புகழ்வதுவே! விப்ரமக்கள் இனத்தாரே!
பிறந்தநாளின் பனிரெண்டாம் தினத்தினிலே பெயருற்றார்
விப்ரநாரா யணன்என்பதுவாய்! மூத்தோரை இளையோரை
ஒன்றெனவே கருதினாரே! சமமான மரியாதை
காட்டினரே! அரங்கற்கே அடிமையாய் வாழ்ந்தாரே!
நந்தவனம் அமைத்திட்டே மலர்தொண்டு ஆற்றினாரே!
மாலடியார் தம்மையெலாம் வழிபட்டார்! பாததூளி
தலைமேலே அணிந்தாரே! ஆணவமது அற்றாரே!
பரமனுக்கும் அடியார்க்கும் நல்லடிமை பூண்டாரே!
அடிப்பொடிக்கு தொண்டரானார்! கண்ணன்தான் அரங்கனென
நேரேற்றார்! சாதிமுறை எதிர்த்தாரே! உடலதனை
பூமிக்கும் ஆன்மாவை இறைவனுடன் இணைத்தாரே!
திருமால்நூல் கல்லாதார் திருமாலை அறியாதாரே!
விடியலதனின் நிகழ்வுகளை பள்ளியெழுச்சி உணர்த்திடுமே!
முன்வாரம் இவ்வாரம் இரண்டுபாவும் ஏற்றமாமே!



கவிஞர் கணக்காயன் (இ. சே. இராமன்)

# யாரோ ஒருவரால்



தீண்டப்பட்ட சுவடுகள்
மீண்டும் புதுப்பிக்கப்படுகிறது
புண்பட்ட பின்பு அல்ல
புண்படும் முன்பே புதுப்பிக்கப்பட்டதால்
யார் ஏன் யாரால் எனும் ஆக்க அரங்கேற்றத்தில்
அன்று நானும் ஓர் ஆரம்பம்
நீந்தும் மீன் போல் நானும் நீந்துகிறேன்
இந்த பித்த மானிட கூட்டத்தில்
பிடித்துப் பழக பல்லாயிரம் பேர்
பிடிக்கப்பட்டு பழக யாரோ
காரணம் கண்ணோட்டத்தில் அல்ல
நம் கை கரத்தில் அன்று
இன்று நிலைமையைக் கண்டு
நம் மனதை வெல்லும்
மனித மானிடப் பிறவியே
அன்று மரணப் பின்னணியில் உனக்கும் எனக்கும்
வெல்வது யார் யார் என்று அறிவாயா நீ
அறியாத ஆக்கத்தில் அறிவுற்ற மனிதா
அரங்கேற்றத்தில் நீயும் நானும் ஒன்றுதான்
யாரோ ஒருவர் தினமும் தீண்டும் தீண்டலில் அல்ல
அவர் சோதிக்கும் மோதலில்
யாரோ ஒருவரால் உன் தனமும் என் கனமும் அன்று.

கவிஞர் ம. செல்லமுத்து, நூர்த்தப்பூர்

# அவள்

வாழ்க்கை என்னும் வாடகை வீட்டில்
அன்பென்னும் வாசல் வழி வந்து
என்னுடன் குடியேறியவள் அவள்
கள்ளம் கபடமில்லா கார்மேகம் அவள்
பட்டாடை உடுத்திய பாவை அவள்

பட்டுப்புடவை கட்டிய பட்சிளம் குழந்தை அவள்
குளிர் கால மழையாய் என்னை நனைத்து,
வெயில் காலத்தில் குடையாய் என்னை காத்தவள்.
அவள் சிரிப்பு சத்தம் தான் என் வீட்டு பூஜை மணி சத்தம்.

அவள் அழுகைதான் என் வாழ்க்கையின் பாடல்.
அவள் கோபம்தான் என்னை சரி செய்யும் கண்ணாடி.
அவள் பாசம்தான் என்னை வாழ வைக்கும் உணவு.
அவளுக்காகத்தான் என் உழைப்பு,
அவளுக்காகத்தான் என் கனவுகள்.
அவள் நலமே என் வாழ்க்கையின் நோக்கம்.
அவள் சிரிப்பே என் வெற்றியின் அடையாளம்.

வாழ்க்கை என்னும் பயணத்தில்
சோகங்கள் எனும் முட்களை எல்லாம் பறித்து விட்டு
சந்தோசங்கள் எனும் மலர்களை
எனக்காக பறித்து வந்தவள் அவள்.
அவள் இருக்கும் வரை என் வாழ்க்கை என்னும் வாடகை வீடு
என்றுமே சொர்க்கம் தான்



கவிஞர் ஈ. ரமேஷ், திருப்பூர்

# நதியும் ஆசான்

ஓடிக் கொண்டிருந்த
நதியிடம் கேட்டேன்
ஓய்வின்றி எப்படி
உன்னால் ஓட முடிகிறது
நதி நீர்திவலையை
என்மீது தெளித்துவிட்டு
நீயும் ஓடிப்பாரென
சொல்லிவிட்டு ஓடத் தொடங்கியது.



கவிஞர் செ. இலட்சுமணக்குமார், ஈரோடு

ஆட்டோவிலிருந்து இறங்கி சில்லறை கொடுத்து விட்டு பூனா ஏர்போர்ட்டிற்குள் நுழைந்தான் பழனி. கொஞ்சம் சுற்றும் பார்த்துக் கொண்டு யாரும் தெரிந்தவர்கள் இல்லையென்று தெரிந்து கொண்டு முகத்தில் போட்டிருந்த துணியை எடுத்துக் கொண்டு ‘‘ஒன் டிக்கெட் டு மும்பை.’’ என்றான் டிக்கெட் கவுண்ட்டருக்கு வந்து.

"விஸ்தாரா விமானம் போய்விட்டது."என்றவள் கணணியில் எதையோ தேடி விட்டு ‘‘வேற பிளைட்டிலே டிக்கட் இல்லை, நாளைக்குத் தான் போக முடியும்.’’ என்றாள் டிக்கெட் பெண்மணி.

"ஏர் சகாராவில் அவசர டிக்கெட்டுகள் எளிதாக கிடைக்கும் என்றார்கள். கொஞ்சம் முயற்சி செய்யுங்களேன்.’’ என்றான் பழனி.



‘‘கொஞ்சம் இருங்கள் பிஸினஸ்கிளாசில் ஒரு டிக்கெட் காலியாக இருக்கிறது. யாரோ தமிழ்நாட்டு மந்திரி போவதாக இருந்து கான்சல் செய்யப்பட்டிருக்கிறது.’’

‘‘என்னது... மந்திரி இந்த விமானத்தில் போகவில்லையா? சரியாகப் பாருங்கள். அதோ மந்திரியின் கார் விமான நிலையத்திற்குள் நுழைகிறதே.’’ என்றான் பழனி. தூரத்தில் மந்திரி வலம் புரிமாதவன் இறங்கியதைப் பார்த்துவிட்டு.

‘‘ஸாரி...ஸாரி.. மந்திரியின் உதவியாளரின் டிக்கெட் ரத்து செய்யப்பட்டுள்ளது. நீங்கள் பிசினஸ் கிளாஸ் டிட்கெட் வாங்கிக் கொள்கிறீர்களா?’’ என்றுகேட்டாள்.

''சரி மேடம்.'' என்று பர்சைத் திறந்து கிரெடிட்கார்டு எடுத்தபோது பர்சில் இருந்த போட்டோவில் 'ஏய்..மச்சான் ...எப்போது வரப் போகிறாய்?' என்று கேட்டாள் மஞ்சுளா. 'ஸாரி மஞ்சு என்னை மன்னித்து விடு. அடுத்தப் பிறவியில் சந்திப்போம் என்று கண்களைத் துடைத்து விட்டு கிரெடிட் கார்டு கொடுத்து டிக்கெட் வாங்கிக் கொண்டான்.

காலில் பட்ட அடியில் இரத்தம் கசிந்து கொண்டிருந்தது. பேண்டில் தெரிந்தது. உடனடியாக பாத்ரூம் போய் பட்டிப் போட்டுக் கொண்டு கையில் கொண்டு வந்திருந்த முஸ்லீம் பெண்களின் குர்தாவைப் போட்டு முழுவதுமாக உடலை மூடிக் கொண்டு விமான நிலையத்திற்குள் நுழைந்தான்.

காலில் செருப்புக்கு அடியில் ஒளிந்திருந்த துப்பாக்கியை எப்படி உள்ளே கொண்டு போகப் போகிறோம், வீணாக அளவுக்கதிகமாக ரிக்ஸ் எடுக்கிறமோ?. மந்திரியை மும்பையில் போய்ச் சந்தித்திருக்கலாம் என்று யோசித்த போது, "அண்ணா சீக்கிரம் போ, மந்திரி விமான நிலையத்திற்குள் நுழைந்து விட்டான். விடாதே அவன் விமானத்திலிருந்து இறங்கும் போது பிணமாகத்தான் இறங்க வேண்டும்." என்றாள் கவுசல்யா அவன் காதுக்குள்.
டிக்கெட் செக்கப்பிற்கு போன போது கொஞ்சம் கை கால் உதறலெடுத்தது. மனம் கொஞ்சம் பொறுமையிழந்து வேகமாக அடிக்க ஆரம்பித்தது.

நல்லவேளை, அந்தப் பெண்பரிசோதகி, தோழியிடம் பேசிக்கொண்டே குர்தா அணிந்திருந்த பழனியை பரிசோதித்து விட்டு அனுப்பிவைத்தாள். காத்திருக்கும் அறையில் மந்திரி ஓரமாக உட்கார்ந்து செல்போனில் பொம்மை விளையாட்டு விளையாடி கொண்டிருந்தார். வேண்டுமென்றே அருகில்போய் பெண்கு ரலில் ''எக்ஸ்க்யூஸ் மீ... வாட் இஸ் த டைம் நவ்..'' எனக் கேட்டான் பழனி குர்தாவை நகர்த்தாமல்.

கவிஞர் இரஜகைநிலவன்

"நேரம் பதினொன்றாகிறது" என்றவர் தொடர்ந்து பொம்மை விளையாட்டில் ஈடுபட்டார். எல்லோரையும் விமானதளத்திற்குள் அழைப்பதற்காக அறிவிப்புகள் வர ஒவ்வொருவரா கவிமானத்தில் ஏறினர்.

மந்திரி அமர்ந்திருந்த இருக்கைக்கு அடுத்தப்படியாக இருந்த இருக்கையில் இடம் கிடைத்திருக்க 'ஒண்டர்புல்ஆஃப்பர்.' என்று மகிழ்வான குரலில் சொல்லிக்கொண்டு உட்கார "என்னது?" என்று மந்திரி சந்தேகமாக கேட்க "உங்கள் அருகில் அமர எவ்வளவு அருமையான சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது பாருங்கள். நான் உண்ணையிலே அதிபாக்கியசாலி பெண் தான்.'' என்றான் பழனி பெண் குரலில்.

"அதானே பார்த்தேன்" என்று சந்தேகம் தீர்ந்தவாறு ஆங்கில நாளிதழை எடுத்துப்பார்க்க ஆரம்பித்தார் மந்திரி.

விமானம் பறந்து சீரான நிலையில் நிற்க மந்திரி ''இதுஎன்னதெரியுமா?'' என்று கேட்டான். ஏதோ தெரிந்த குரலாக உணர இடுப்பை உறுத்திய துப்பாக்கியை பார்த்தவர் கத்த முனைந்தார்.

''வீணாகக் கத்தாதே. சப்தம் வெளியே வருவதற்குள் உன் உயிர் பரலோகம் தொட்டு விடும்.'' ''நீ!....நீ....நீ.....'' கண்கள் அகலத் திரும்பக் கூர்மையாகப் பார்த்தார்.

''ஆம்... நான்... நானேதான். பழனி. வீணாக சப்தம் எழுப்பினால் நீ இறந்து போவாய். நான் ஜெயிலுக்குப் போவேன். அவ்வளவு தான்.'' மெதுவாக பல்லைக் கடித்துக் கொண்டு சொன்னான். "ஆமாம்! எப்படி விமானத்திற்குள் துப்பாக்கிக் கொண்டு வந்தாய்.? எப்படி உன்னை அனுமதித்தார்கள்.?"

"அது ஒருதனிக் கலை. அந்த மந்திர மாயமெல்லாம் எனக்கு மட்டுமே தெரியும்."
''சரி.....என்னைக் கொன்று விடாதே.என்ன வேண்டும் சொல்.''
''உன் உயிர்.''
''தம்பி... உன் பெயரென்ன?''
''எதற்கு? இறங்கிய பிறகு என் பெயர் கொண்ட அனைவரையும் தேடுவதற்காகவா. இருளப்பன் என்று வைத்துக் கொள்.''என்றான் பழனி.

விமானப் பணிப்பெண் ''எல்லோரும் இன்னும் சற்றுநேரத்தில் மும்பை சத்ரபதி சிவாஜி விமானநிலையத்தில் இறங்க இருக்கிறோம்.'' என்று அறிவித்தாள்.



தொடரும்...

கவிஞர் இராஜகைநிலவன்

# ஆ.கார்மேகக் கோனார்

## கட்டுரை

### பிறப்பு மற்றும் இளமை



ஆ. கார்மேகக் கோனார் 1889-ம் ஆண்டு, இராமநாதபுரம் மாவட்டத்தின் கமுதியருகே உள்ள அகத்தார் இருப்பு கிராமத்தில் ஆயர்பாடிக் கோனார் மற்றும் இருளாயி தம்பதியினருக்குப் பிறந்தார். பள்ளிக்கல்விக்குப் பின் ஆ. கார்மேகக் கோனாரது தமிழார்வத்தைக் கண்ட தந்தை, அக்காலத்தில் மதுரைமாநகரில் நான்காம் தமிழ்ச்சங்கத்தில் இயங்கிவந்த செந்தமிழ்க் கல்லூரியில் அவரைச் சேர்க்க முற்பட்டார். அக்கல்லூரியின் முதல்வர் நாராயணையங்கார் ஆ. கார்மேகக் கோனாருக்கு கல்லூரியில் இடமளித்தார். அங்கு நடத்தப்பட்ட பிரவேச, பால, பண்டித வகுப்புகளில் தேர்ச்சிபெற்றார்.

### பேராசிரியர் பணி

ஆ. கார்மேகக் கோனார், கல்லூரிப் படிப்பை முடித்ததும் மதுரை அமெரிக்கன் கல்லூரியில். 1914-ம் ஆண்டு தன் 25-ம் வயதில், தமிழ்ப் பேராசிரியராகப் பணியில் சேர்ந்து, 37 ஆண்டுகள்பணியாற்றினார். மேலும், சென்னை பல்கலைக் கழகப் பாடத்திட்டக் குழுவில் ஆ. கார்மேகக் கோனார் தொடர்ந்து 21 ஆண்டுகள் தலைவராக இருந்தார். அமெரிக்கன் கல்லூரியின் தமிழ்த்துறை தலைவராக பதவி வகித்து, 1951-ம் ஆண்டு ஓய்வு பெற்றார்.

### சொற்பொழிவு

ஆ. கார்மேகக் கோனார், சிறந்த சொற்பொழிவாளராகவும் திகழ்ந்தார். சென்னை பல்கலைக்கழகம், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், கரந்தைத் தமிழ்ச் சங்கம் போன்றவற்றில் இவர் ஆற்றிய

திரு அ.வில்சன், இதழாசிரியர்

# கட்டுரை

### சொற்பொழிவு

ஆ. கார்மேகக் கோனார், சிறந்த சொற்பொழிவாளராகவும் திகழ்ந்தார். சென்னை பல்கலைக்கழகம், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், கரந்தைத் தமிழ்ச் சங்கம் போன்றவற்றில் இவர் ஆற்றிய சொற்பொழிவுகள் சிறப்பானவை. 'சிறப்புரை வித்தகர்' என்று தமிழறிஞர்களால் பாராட்டப்பெற்றார். ஆ. கார்மேகக் கோனார், மதுரை தமிழ்ச் சங்கம் நடத்திய விழா ஒன்றில் ஆற்றிய 'மலைப்படுகடாம்' பற்றிய சொற்பொழிவும், சென்னைப் பல்கலைக் கழகத்தில் ஆற்றிய 'பண்டை தமிழர் நாகரிகம்' என்ற தொடர் சொற்பொழிவுகளும் முக்கியமானவை. மதுரை திருவள்ளுவர் கழகத்தில், 1955-ம் ஆண்டு நடந்த ஐங்குறுநூறு மாநாட்டுக்குத் தலைமையேற்று ஆற்றிய சொற்பொழிவுகள் அறிஞர் பலரால் பாராட்டப்பட்டன. அச்சொற்பொழிவுகள் பின்னர் 'ஐங்குறுநூற்றுச் சொற்பொழிவுகள்' என்ற தலைப்பில் திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தாரால் நூலாக வெளியிடப்பட்டது.

### இலக்கியப் பணிகள்

ஆ.கார்மேகக்கோனார் மதுரைத் திருவள்ளுவர் கழகம் போன்ற அமைப்புகளுடன் இணைந்து தமிழறிஞர்களை கௌரவிப்பது, சொற்பொழிவுகள் நடத்திப்பது போன்ற தமிழ்ப்பணிகளைச் செய்தார். தி.வை. சதாசிவ பண்டாரத்தார் போன்ற தமிழறிஞர்களை அவர்களின் வாழ்நாளிலேயே கௌரவிக்க அவரால் இயன்றது.




திரு அ.வில்சன், இதழாசிரியர்

# ஆ.கார்மேகக் கோனார்



படைப்புகள்

- அறிவு நூல் திரட்டு (2 தொகுதிகள் - உரைநூல்)
- ஆபுத்திரன் அல்லது புண்ணியராஜன் (உரைநூல்)
- இதிகாசக் கதாவாசகம்,( 2 தொகுதிகள்)
- ஐங்குறு நூற்றுச் சொற்பொழிவுகள்
- ஒட்டக்கூத்தர்கண்ணகி தேவி
- கார்மேகக் கோனார் கட்டுரைகள்
- கார்மேகக் கோனார் கவிதைகள்
- காப்பியக் கதைகள்
- செந்தமிழ் இலக்கியத்திரட்டு I
- தமிழ்ச்சங்க வரலாறு (கட்டுரை)
- தமிழ்மொழியின் மறுமலர்ச்சி
- நல்லிசைப் புலவர்கள் (உரைநூல்)
- பாலபோத இலக்கணம்
- மதுரைக் காஞ்சி
- மலைபடுகடாம் ஆராய்ச்சி
- மூவருலா ஆராய்ச்சி

விருதுகள், சிறப்புகள்

மதுரையில் 1955- ஆம் ஆண்டு நாவலர் சோமசுந்தர பாரதியார் தலைமையில் நடைபெற்ற விழாவில் 'செந்நாப்புலவர்' என்னும் பட்டத்தை ஆ. கார்மேகக் கோனாருக்கு பி.டி. ராஜன் வழங்கினார்.

மறைவு

ஆ. கார்மேகக் கோனார் அக்டோபர் 23, 1957 அன்று மதுரையில் காலமானார். படைப்புகளை 2008-ல் தமிழ்நாடு அரசு நாட்டுடைமையாக்கியது.

நன்றி
https://tamil.wiki/
தி ஹிந்து ஆங்கிலம்

திரு அ. வில்சன், இதழாசிரியர்

## நாளை
# நமதே

புத்தகம் என்பது

தொட்டுப்பார்த்தால்

வெறும் காகிதம்

தொடர்ந்து படித்தால்

அதுவே பேராயுதம்

**அகர முதல இலக்கியப் பேரவை**

அகமும் தமிழே

முதலும் தமிழே

"தனித்தியங்கும் தன்மை தமிழினுக் குண்டு
தமிழே ஞாலத்தில் தாய்மொழி பண்டு
கனிச்சாறு போற்பல நூலெலாம் கண்டு
காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு"

என்றும் தலைப்பணியாம் தமிழ்ப்பணியில,

அகர முதல செய்திக்குழு அகர முதல இலக்கியப் பேரவை
அகர முதல கல்விக்குழு சிவம் அறக்கட்டளை

தொடர்பிற்கு :

9597887847
8870884969



# அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com